மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு பிரச்சினை என்னுடைய கவனத்திலே இருக்கிறது. CRA அவர்களுடன் கலந்துபேசி உடனடியாக முடிக்க வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் மத்தியில் பேசி, வழக்கை வேகப்படுத்தி, விரைந்து முடிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக விரைவில் அதை முடித்துக்கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

தொழிற்சாலை

***51536—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தியாகும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தியாகும் உப்பை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

2023 மார்ச் 24]

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வேதாரண்யத்தில் இலட்சக்கணக்கான டன் உப்பு உற்பத்தியாகிறது. இரண்டு கம்பெனிகள், அங்கே உற்பத்தியாகிற உப்பைப் பயன்படுத்தி காரைக்கால் மற்றும் மேட்டூரில் தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. உப்பு உற்பத்தியாவதற்கு எந்தளவிற்கு உப்புத்தன்மை வேண்டும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். சுற்றியிருக்கிற கிராமங்களெல்லாம் உப்புத்தன்மையினால் பாதிக்கப்படுகின்றன. ஆனால், அங்கு உற்பத்தியாகிற இலட்சக்கணக்கான டன் உப்பை காரைக்காலுக்கும், மேட்டூருக்கும் எடுத்துச் சென்று தொழில் செய்கிறார்கள். அதனைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'இல்லை' என்ற பதிலை மறுபரிசீலனை செய்து, உப்பை மூலப்பொருளாகக் கொண்டு தொழில் தொடங்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு பதிலளிக்கையில், ஜாக்கிரதையாக 'தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை' என்று நான் சொன்னேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர். அந்தப் பகுதியைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்தவர். ஏற்கெனவேகூட, கடந்த ஆட்சிக் காலத்தில் அங்கே caustic soda உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை தொடங்குவதற்கான அறிவிப்பு 2014–2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. ஆனால், caustic soda தொழிற்சாலை தொடங்குவதிலே இருக்கக்கூடிய சிரமங்கள், அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கினாலும் அது இலாபகரமாக இயங்க முடியாத ஒரு சூழ்நிலை, தொழில்நுட்பக் கோளாறுகள், குளோரின் தயாரிப்பு, மின்சாரத் தேவை போன்ற பலவற்றைக் கருத்திலேகொண்டு, அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டாலும்கூட, 2021 ஆம் ஆண்டு கைவிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, அங்கு 5 இலட்சம் டன் உப்பு உற்பத்தியாகிறது. அதில் 3.5 இலட்சம் டன் உப்பு பெரிய தனியார் நிறுவனங்களிடம் செல்கிறது. மீதமுள்ளவை 1.5 இலட்சம் டன் சிறு, குறு உற்பத்தியாளர்களிடம் இருக்கிறது. எனவே, தனியார்

நிறுவனங்கள், தொழில் முதலீட்டாளர்கள் அங்கிருக்கக்கூடிய உப்பைப் பயன்படுத்தி, வேறு பல பொருட்களைத் தயாரிப்பதற்கு சாத்தியக்கூறு வரும் என்று சொன்னால், Techno-Economic Feasibility Study செய்து, யாராவது முன்வருவார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அரசு அந்த நிறுவனத்தை துவக்குவதற்கான உரிய வசதிகளை அங்கே ஏற்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எங்களுடைய ஆட்சியில் இந்த* caustic soda *கம்பெனியைத் தொடங்குவது தொடர்பாக, தனியார் முதலீட்டாளர்களை அழைத்து வந்து, இடத்தைப் பார்த்து, தேர்வு செய்து, ஏற்புடையதுதான் என்று முடிவு செய்யப்பட்டது. நீங்கள் சொல்வதுபோன்று அந்தளவுக்கு உப்பு இல்லையென்று சொன்னால், கடல்நீரைப் பயன்படுத்தி, உப்பையும் தண்ணீரையும் பிரித்தெடுத்து, அதனை நாம் பயன்படுத்தி* caustic soda *கம்பெனியை உருவாக்க முடியும் என்று தனியார் முதலீட்டாளர்கள் சொல்கிறார்கள். மேலும், அந்த* caustic soda-*வை உருவாக்குகிறபோது, அதிலிருந்து 60* by-products-*களை தயார் செய்ய முடியும்; அந்த உப்பையும், தண்ணீரையும் பிரித்தெடுக்கிறபோது, மழைநீரைவிட சுத்தமான நீராக அந்த நீர் கிடைக்கும்; குடிநீருக்கும் பயன்படுத்த முடியும்; விவசாயத்திற்கும் பயன்படுத்த முடியும் என்று அவர்கள் சொன்னார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் மட்டும் எழுப்பவில்லை; எனக்கு முன்னால் வேதாரண்யம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கின்ற அனைவராலும் இந்த மன்றத்திலே எழுப்பப்பட்டிருக்கிறது. உப்பு சத்தியாகிரகம் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தனியார் யாரேனும் முன்வந்தால் அனுமதி தருகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில் அதனை மறுபரிசீலனை செய்யும்படி நீங்கள் சொல்லுங்கள்.*

2023 மார்ச் 24]

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலையைக் கேட்கிறபோது, அதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா, இல்லையா என்கிற கேள்வி எழும். வாய்ப்புகள் இருக்கின்றன; போதுமான நிலம் இருக்கிறது; எல்லாமே இருக்கின்றன. அதனை ஏற்படுத்துகிற சூழலை ஏற்படுத்தித்தர வேண்டும். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பு உற்பத்தி செய்யக்கூடிய உப்பளங்களைப் பயன்படுத்தி, அங்கிருக்கக்கூடிய கடல்நீரைப் பயன்படுத்தி, உப்பினை உற்பத்தி செய்து, அந்தப் பகுதிக்கு ஒரு நல்ல தொழிற்சாலையைக் கொண்டுவர வேண்டும் என்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த உள்ளக்கிடக்கையை நான் புரிந்துகொள்கின்றேன். அதனை நான் வரவேற்கின்றேன். அதேநேரத்தில்* caustic soda *உற்பத்தி குறித்து பல்வேறு நிறுவனங்களுடன், ஏற்கெனவே, பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.* Caustic soda*-வைப் பொறுத்தவரை, நீங்கள் சொல்கிறமாதிரி ஏதேனும் ஒருவகையில் உற்பத்தி செய்தாலும், வெளியிலிருந்து* import *செய்யக்கூடிய* caustic soda*-க்கும், இங்கே உற்பத்தி செய்யப்படும்* caustic soda*-க்கும் உள்ள விலை வித்தியாசத்தைப் பார்க்கின்றபோது,* import *செய்வதன் விலை இங்கே உற்பத்தியாவதைவிட குறைவாக இருக்கிறது. எனவே,* financially feasible *ஆக இல்லை. இங்கே உற்பத்தி செய்வதன் விலை அதிகமாகவும்,* import *செய்யக்கூடியவையின் விலை குறைவாகவும் இருப்பதால், அங்கிருந்தே நாம் கொண்டு வந்துவிடுகிறோம்.*

மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, by-products *பற்றி பேசினார்கள்.* Chlorine *அதனுடைய* by-products *மீண்டும் அந்த* chlorine*-ஐ நீங்கள் விற்பதில் இருக்கக்கூடிய சிரமங்கள்; அதேபோன்று அங்கேயிருக்கக்கூடிய மின்சாரத் தேவை, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் பல தொழிற்சாலைகளோடு ஏற்கெனவே பல மட்டங்களில்*

நடந்த பேச்சுவார்த்தைகளில், சாத்தியக்கூறுகள் இல்லை என்று அப்போதைய நிலையில் அது கைவிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட bromine போன்று இதர by–products இருக்கிறதா, வாலிநோக்கத்தில் செய்வதுபோன்று இருக்கிறதா அல்லது மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் சொல்வதுபோன்று, வேறு பல தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, இதனை நாம் revive செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கிறதா என அந்தப் பகுதி மக்களுடைய கருத்துகளை, அந்தப் பகுதியில் இருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நீங்கள் சொல்கின்ற கருத்துகளின் அடிப்படையில் யாரேனும் தொழில் துவங்குவதற்கு முன்வருவார்கள் என்று சொன்னால், நிச்சயமாக அதற்கான எல்லாவிதமான ஊக்கத்தையும் அளிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ethanol கொள்கையை அறிவித்திருக்கிறது. அது ஒரு சாதனை அறிவிப்பு; மிகச் சிறப்பான அறிவிப்பு. விவசாயிகளின் வருமானத்தை கூட்டக்கூடியது. இப்போதிருக்கக்கூடிய தொழிற்சாலைகள் கரும்பிலிருந்து Ethanol—ஐ தயாரிக்கின்றன. ஆனால், வெளிநாடுகளில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து எத்தனாலை தயாரிக்கின்றார்கள். மரவள்ளிக்கிழங்கினுடைய விலை வீழ்ச்சியடைந்திருக்கிறது. ஆகையால் தமிழ்நாட்டிலிருக்கக்கூடிய மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி உப்புபற்றியது நீங்கள் மரவள்ளிக்கிழங்கிற்கு வந்துவிட்டீர்கள். சீக்கிரம் கேள்வியை முடியுங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக்கிழங்கிலிருந்து எத்தனால் தயாரிக்க தனியார் நிறுவனங்கள் திடீரென்று முன்வரமாட்டார்கள். வெளிநாட்டிலிருக்கக்கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, உதாரணத்திற்கு முதல் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

2023 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் புதிய தொழிற்கொள்கைகளை உருவாக்குவது புதிய தொழில் முதலீடுகளை வரவேற்பதற்காகத்தானேயொழிய, தொழிற்கொள்கைகளை நாம் உருவாக்குகிறபோது, நாமே ஒவ்வொரு தொழிற்கொள்கைக்கும் ஒரு* factory*-ஐ கொண்டுவர முடியாது. உதாரணத்திற்கு* EV policy *கொண்டு வர வேண்டுமென்றால் உடனடியாக அரசாங்கம்* EV*-க்கு செல்ல முடியாது.* Ethanol *என்பது நீங்கள் சொல்வதைப்போன்று மிக முக்கியமான ஒரு முன்னெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனைச் செய்திருக்கிறார்கள். எத்தனால் கொள்கையை தமிழ்நாட்டில் உருவாக்கியிருப்பது ஒரு மிகச் சிறந்த கொள்கை என்று அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்வதுபோன்று, சர்க்கரை ஆலைக்கு அது மாபெரும் வரப்பிரசாதமாக இருக்கிறது.* Complete turn around *செய்யக்கூடிய அளவிற்கு இன்றைக்கு* ethanol policy *வந்திருக்கிறது.*

முற்பகல் 10–40

Feedstock*-ஐ பொறுத்தமட்டில் நீங்கள் சொல்வது மாதிரி நெல்லிலிருந்து வரக்கூடிய அரிசி மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அது நெல் உற்பத்தியாளர்களுக்கு மிக முக்கியமான வாய்ப்பாக அமையும். மரவள்ளிக்கிழங்கைப்போல மற்ற* feedstock *குறித்தும் நீங்கள் இங்கே கருத்துகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். அதுகுறித்து தொழில்நுட்ப வகையில் யார் வந்தாலும் கொள்கை அடிப்படையில் உதவுவதற்கு அரசு ஆர்வமாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

தடையின்மைச் சான்று

***54982—திரு. க. கணபதி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—